372

சுயம்பிரகாசத் துணை.

# ஞானசூரியன்.

இது ஒரு சிறந்த மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை

தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு. (தமிழ் வேதம்.)

(All Rights Reserved.)

மலர் 1.] துந்துபிஞு தைமீ 1உ. [இதழ் 10.

## கடவுள் வணக்கம்.

தேனெனத் தமிழ்சொல் கருணையானந்த
தேசிக வுட்சிதா காய
ஞானசூ ரியன்வந் துதித்தொளி விரிப்ப
நானிலத் துதித்தமா னிடர்கள்
நானெனு மகந்தைக் காரிருட் படலம்
நவிந்தவ ருளமலர் விரியச்
சோனைபோ லருள்செய் சுயம்பிர காசச்
சோதியைப் போதெலாந் தொழுவாம்.

(பத்திரிகாசிரியர்.)

விண்ணிறைந்த வெளியாமென் மனவெளியிற் கலந்தறிவாம்
வெளியி னூடும்
மண்ணிறைந்த பேரமுதாய்ச் சதானந்த மானபெருந்
தகையே நின்பால்
உண்ணிறைந்த பேரன்பா லுள்ளுருகி மொழிகுழறி
யுவகை யாகிக்
கண்ணிறைந்த புனலுகுப்பக் கரமுகிழ்ப்ப நின்னருளைக்
கருத்தில் வைப்பாம்.

(தாயுமான வள்ளல்.)

உரையால் நினைவால் அருள்நோக்கால் உலக ருணர்வைப் பிணித்தமல
இருளா னதனை அறமாற்ற எழுந்த ஞான சூரியனே. (பிரபுலிங்கலீலை)

# ஞானசூரியன்

துந்துபிஹு தைமீ 1உ

## இல்மே ரூஹானி என்னும்

## ஆத்மஞானத்தின் உயிர்.

ஆத்ம ஞானமானது எந்த மதத்தின் எல்லைக்கும் உட்பட்டதல்ல. அது எந்த மதத்தையும் தள்ளாது. எந்த மதமும் மதவைராக்கிய மில்லாவிட்டால் அதை சம்மதிக்கும் மத வைராக்கியமோ நெருஞ்சி முள்ளு. இந்த பாதைக்கு இதுவே பெரும்பாலருக்கு கருவேலமுள்ளாக இருக்கலாம். ஆனதால் இதை எல்லோரும் அநுசரிக்கவேண்டிய நிர்ப்பந்தமில்லை. ஆனால் இந்த ஞானத்தை ஒருமதத்தின் எல்லைக்கு உட்படுத்தி விளங்குவதும் அசாத்தியம். இந்த ஒரு மதத்தின் எல்லைக்கு உட்படாவிட்டாலும் எம்மதத்தின் மத சம்பந்தமான சடங்குகள், ஜபம், தபம், யாவும் இதைச் சேர்ந்தது. ஆனதால் எல்லா மதமும் இதையே தழுவி நிற்கும். இந்த ஞானமானது அநேகரால் பரீட்சிக்கப்பட்டது. மேலும் ஹிப்னடிஸம், மெஸ்மெரிஸம் முதலான சித்துக்களுக்கு முடிவான மூலமான இதில் சொல்லப்பட்ட சேதிகளை இந்நூல் பார்த்த அன்றையதினமே பரிசோதிக்கலாம். ஆனால் சில காரணங்கள் 7 நாளைக்குள் முடிவுக்கு வருகின்றன. இதற்குள்ள அப்பியாசத்தை 2 அல்லது 3 வாரமாவது பழகிக்கொண்டால் துரிதமாக முடிவுக்கு வரும். ஒருக்கால் தாமதப்பட்டால் அப்பியாசத்தை விடக்கூடாது.

கடவுளின் அம்சமே ஆத்துமா. ஆத்துமாவின் அம்சமே ஆகாயம். ஆகாயமானது முடிவில்லாத அகண்டமாக இருக்கின்றது. இதன் விசாலத்தை எவராலும் மட்டுப்படுத்த முடியாது. ஆனால் ஆகாயத்தைவிட ஆத்துமா அதிக சூட்சமமாகவும் ஆத்துமாவை விடக் கடவுள் அதிகத் தூய்மையாகவும் இருக்கலாம். ஆகையால் சுத்த வெட்டவெளியை ஒப்பிடுவது வழக்கம். வெட்டவெளியை அதற்கு ஒப்பிடுவதில்லை. கடவுள் அம்சமோ எந்த வஸ்துவின் சுயத்தைவிட்டும் ஒழியாது. ஆகையால் ஆகாயத்தை ஆன்மா என்றுவது ஆன்மாவைக் கடவுள் என்றுவது சொல்லலாம். கடவுளுக்கு மேல்பட்ட வலுவான வஸ்து ஒன்றுமில்லை. ஆகையால் இந்த ஞானத்தில் ஒவ்வொரு காரியத்தையும் கடவுளாகவே இருந்து செய்யவேண்டும். இல்லாவிட்டால் நம் சித்தத்திற்கு அதிக வலுவிருக்காது. நம் காரியத்தைக் கட்டாயம் சாதிக்கமுடியாது. இதில் நமக்குச் சந்தேகமற்ற நம்பிக்கை இருக்கவேண்டும், நாம் நாடியபடி நமது ஆன்மா நமக்கு முடித்துத்தரும் என்பதை ஞாபகத்தில் வைக்கவேண்டும். பூமியானது ஆகாயத்தில் ஓர் பந்தைப்போல் சுழல்கின்றது. அவ்வாறே சூரியன், சந்திரன், நட்சத்திரம் முதலிய எல்லாக் கோளங்களும் ஆகாயத்தில் சுற்றுகின்றன. அவைகளின் எல்லையைக் கடக்காமல் கடவுளின் பிரதிநிதியாகிய ஆத்துமாவானது அடக்கியாளுகின்றது. பூமியும் ஒரு நட்சத்திரம் ஆகையால் சந்திரனைச்சூழ ஆகாயம் இருப்பதுபோல் பூமியைச் சூழ ஆகாயமிருக்கின்றது. சுத்த வெளியாகிய ஆகாயத்தை உண்டென்றும் இல்லை என்றும் சொல்லமுடியாது. அதைப் பார்க்கவும் இயலாது. அதிலுள்ள இருளையும் வெளிச்சத்தையும் பார்க்கலாம். அதை அறியவும் முடியாது. அதில் பஞ்சவர்ணத்தில் எதாவது ஒன்றை அறியலாம். ஆகாயத்தில் பறக்கும் பக்ஷிகளுக்கு யாதொரு தடையும் எற்படாத குறிப்பைக்கொண்டு அதை உண்டென்று நம்பலாம். அதை பிரம்மத்திற்கு ஒப்பிடலாம். அதன் விசாலத்தின் முடிவை எத்திக்கொள்ள முடியாது. அதற்கு முடிவும் இல்லை. ஆத்மாவின் பிரதிநிதி

மனம். மனதின்கீழ் அதன் காரியதரிசிகளாக அநேக ஆவிகள் இருக்கின்றன. அதன் சம்பந்தத்தினால் மனிதன் அநேக தொழில்களுக்கு அருகனாவான். ஆத்மாவே ஆனந்த மயமானது. மனம் விரும்பினதை அழிப்பதும் அதைப் பரவசப்படுத்துவதும் அதற்குச் சொந்தம். இந்தக்காலத்தில் ஜாலவேலைகள் ஏற்பட்டு உண்மையான வேலைகளுக்குப் பஞ்சம் ஏற்பட்டுவிட்டது. யதார்த்தமான ஞானம் மறைந்திருக்கின்றது.

## ஞானத்தின் மகிமையும் மகா இரகசிய அப்பியாசமும்.

ஆகாயமானது முடிவில்லாத விசாலமாயிருக்கின்றது. முடிவில்லாத விசாலத்திற்கு எந்தவிடமும் மையமாகக் காணலாம். பூமியென்றால் பூமியிலுள்ள வஸ்துக்களும் அதைச் சேர்ந்தனவாகையால் பூமிக்கு மேலும் கீழும் தெற்கும் வடக்கும் கிழக்கும் மேற்கும் முடிவில்லாத வெட்டவெளியா யிருக்கின்றனவென்பதை மறக்கக்கூடாது. அதில் பல தூரங்களில் நட்சத்திரமாகிய உலகங்கள் சஞ்சரிக்கின்றன.

## அப்பியாசம்.

இப்போது நாம் அப்பியாசிக்கவேண்டிய தென்னவென்றால் நமக்கு மேலும் கீழும் முன்னும் பின்னும் இடதுபுறமும் வலதுபுறமும் முடிவில்லாத ஏக வெட்டவெளியாக இருக்கின்றதாகச் சிந்தித்து வெளியிலுள்ள ரூபங்களையும் மனதிலுள்ள ரூபங்களையும் நமது சரீரம் உட்பட அதில் அழித்துவிடவும், மீதியை அதாவது இவ்வாறு சொரூப நாசமான மிச்சத்தை அல்லது களங்கமற்ற தெளிவான அம்சத்தை அரூபத்திற்கு அரூபமான என்றைக்குமுள்ள அழியாத தானே தானாயுள்ள தெதுவோ அதைச் சேர்ந்ததெனத் தெரிந்துகொள்ளவும இவ்வாறு நமது அடிமூலம் முடிவில்லாததாகவும் இருக்கின்றது. மேலும் வெளியிலுள்ள ஆகாயமே மனத்தினுள்ளும் இருக்கின்றது. எதையும் மனமுயற்சியால் உண்டாக்கலாம்.

(இன்னும் வரும்)

அ, முகம்மதுத்தாஹிர் சாஹிபு, வழுத்தூர்.

# ஆசிரியரிலக்கணம்.

(177-ம் பக்கத் தொடர்ச்சி.)

---

அந்த ஊசியைப் பெற்றுக்கொண்டு, நால்வரும் ஒரு இடத்தில் உட்கார்ந்து யோசனை செய்தார்கள். நமது குரு ஒரு ஊசி வாங்கிக்கொண்டு வரும்படி நம் நால்வரையும் அனுப்பினார். அப்படியிருக்க, நம்மில் ஒருவன்மாத்திரம் இதைக் கொண்டு போனால் அவர் கோபிப்பார் என்று நிச்சயித்து, அங்கே கிடந்த ஒரு பனைமரத்தில் அந்த ஊசியைச் சொருகி, நாலுபேருமாய் அந்தமரத்தைத் தோளில் தூக்கிக்கொண்டு வழியில் வெகு வருத்தப்பட்டுக் குருவினிடத்திற்குப்போய் சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கி ஓ! பரமகுருவே! தாங்கள் சொன்னபடியே இதோ ஊசி வாங்கிக்கொண்டு வந்திருக்கிறோம் என்று பனைமரத்தைத் தொப்பென்று போட்டார்கள், உடனே அங்கிருந்தவர்கள் எல்லாரும் குலுங்கநகைத்தார்கள். பிறகு, அந்த மரத்தில் சொருகியிருந்த ஊசியைத் தேடிப் பார்த்தபொழுது, அது அகப்படவேயில்லை.

ஆகையால், அறிவீனர்கள் சொற்ப காரியத்திற்காக அதிக முயற்சிசெய்தும், அந்தக் காரியத்தைக் கெடுத்து விடுகிறார்கள்.

**காரணக் குருக்கள்:**—இவ்வுலகத்திற் காணப் பெற்றவையெல்லாம் அழியப் பெற்றவையென்றும், தான் வேறு கடவுள் வேறாய்ப் பாவித்து வழிபடுந் தவமானது கைகூடாதென்றும், தனது யதார்த்த சொரூபத்தையே ஈசனாகப் பாவிக்கவேண்டுமென்றும் நிராசையாய் உபதேசிப்பார்கள்.

சற்சீடர்களுக்கு உபதேசம் செய்யத்தகுந்த ஞானாசிரியர் மாசில்லாத மனமுடையவரா யிருக்கவேண்டும். மனம் களங்கரகித மாகாதவரையில் அவரால் போதிக்கப்படும் உபதேசத்தால் ஞானோதயமாவது துர்லபம். ஏன்! அவருடைய சீவகாந்த சக்தி (Power) களங்கமாக இருந்தால் சீடனுக்கு நன்மையுண்டாகாது. ஞானாசிரியர் சீடனுடைய பந்தபாசங்களை விமோசனஞ்

செய்யுமாறுபண்ணும் தீட்சைகள், மானததிட்சை, பரிசதிட்சை, நயனதீட்சை, வாசகதிட்சை, ஆகம(நூல்) தீட்சை, யோகதிட்சை என ஆறுவகைப்படும். அன்றியும் *ஔத்திரி முதலிய பல வகைத் தீட்சைகளும் உண்டு.

(1) மானததிட்சை—ஆமையைப்போல் பாவனைபுரிவது.
(2) பரிசதிட்சை —கோழி (பட்சி)யைப்போல் பரிசிப்பது.
(3) நயனதீட்சை —மீனைப்போல் நோக்குவது.
(4) வாசகதிட்சை —அட்சரங்களினால் உபதேசிப்பது.
(5) ஆகமதிட்சை —நூற்பொருளைப் போதிப்பது.
(6) யோகதிட்சை —யோகமார்க்கத்தாற் சீடனது இருதயத்திற் சென்று அநுக்கிரகிப்பது.

---

* இந்த அறுவகைத் திட்சைகளேயன்றி, யாகசம்பந்தமான ஔத்திரி முதலிய அநேக வகைத்திட்சைகளும் இருக்கின்றன.

ஔத்திரி தீட்சையானது, ஞான தீட்சை, கிரியாதீட்சையென இருவகைப்படும். மனத்தாற் செய்யப்பெறுவது ஞானதீட்சை, குண்ட மண்டலாதிகளிட்டுச் செய்வது கிரியாதீட்சை. கிரியாதீட்சையானது, நிர்ப்பீசம் எனவும் சபீசம் எனவும் இருவகைப்படும்.

பாலர், விருத்தர், மாதர், வியாதியஸ்தர், அறிவிலிகள், பலபோக விருப்புடையவர்கள் இவர்களுக்குச் செய்யத்தக்கது நிர்ப்பீச தீட்சையாம். இதற்கு நிரதிகாரையென்றும், விருத்தர் முதலிய பக்குவர்களுக்குச் செய்வது சத்திய நிருவாணம் என்றும், வாலீசர் என்னும் அறிவிலிகள் முதலிய மந்த பக்குவர்க்குச்செய்வது அசத்திய நிருவாணம் என்றும் பெயர்.

இயமநியமாதி யுடையார்களுக்குச் செய்யும் தீட்சை, சபீசமென்று சொல்லப்பெறும். இந்தத் திட்சைக்கு அதிகாரையென்றும் பெயர். இந்தச் சபீச திட்சையானது சிவதான்மிணி, உலோக தான்மிணியென இருவகைப்படும்.

பதப்பிராப்தியாகிய புவனங்களிற் சேர்க்குந் தீட்சைக்கு உலோக தான்மிணியென்றும், மோட்சத்தை அடைவிக்குந் தீட்சைக்குச் சிவ தான்மிணியென்றும் பெயர்.

இன்னும் கிரியாவதி, ஞானவதியென்னும் தீட்சைகளுமுண்டு. அவற்றை விரிக்கிற் பெருகுமென நிறுத்தலாயிற்று.

இவற்றுள், நயனம், மானதம், யோகம் என்னும் மூன்றும் அகத்திட்சைகள், பரிசம், வாசகம், ஆகமம் என்னும் மூன்றிலும் குருநாதனுடைய சீவகாந்த சக்தியால் சீடர்களுடைய ஆத்ம சக்தி தூண்டப்பெறுகிறது.

மானத தீட்சை.

ஆமையானது, கரைக்குப் புறம்பாக ஓரிடத்தில் முட்டையிட்டுத் தான் குளத்து நீரிற்குள்ளிருந்துகொண்டே, அம்முட்டைகளின்மீது ஞாபகத்தைச் செலுத்திக் கொண்டிருக்க, முட்டைகள் ஆமையின் வடிவத்தை யடைகின்றன. அதுபோல், குருவானவர் சீடனுக்குப் பரிபாகம் உண்டாக வேண்டுமென்று தமது திருவுளத்தில் தமது அருளுருவாய்ப் பாவித்து நினைக்க நினைக்க சீடனுடைய ஆத்மசக்தி தூண்டப்பெறுகிறது.

பரிசதீட்சை.

கோழியானது, முட்டையிட்டு அவைகளைத் தன் வயிற்றோடணைத்துக் கொண்டிருக்க, வெப்பம் அதிகரித்துக் குஞ்சுகளாகின்றன; ஏனைய பட்சிகளும் அவ்வாறே செய்கின்றன. அதுபோல், குருவானவர் சீடனது தேகபந்தம் அகல, கரசரணாதிகளால் அவனைத் தடவி அநுக்கிரகிக்கவேண்டும். அப்படிச் செய்வதனால் குருவிடத்திலுள்ள ஜீவகாந்த சக்தி (Power) யானது அவர் விரல்களின் வழியாக இறங்கி சீடனுடைய சரீரத்தின் நரம்புகளின் வழியாகச்சென்று அவனுடைய தேகபந்தமான சகல குற்றங்களையும் நீக்கி ஆத்மஞான வுணர்ச்சியைத் தூண்டி அவனது சரீரங் குளிரும்படிப் புளகாங்கிதமுறச் செய்கின்றது இது காரணத்தாலேயே சிரசில் கையைவைத்து பெரியோர்கள் ஆசீர்வதிக்கின்றனர்.

நயனதீட்சை.

விரால் முதலிய சில மீன்கள், தமது கருவைத் தண்ணீரிற் பீச்சிவிட்டு, அவை தன் வடிவத்தை யடையவேண்டுமெனக் கூர்மையாகப் பார்த்தவுடன் அவை மீன் குஞ்சுகளாகின்றன. அதுபோல், குருவானவர் சீடனது அஞ்ஞானம் நீங்குதற்பொருட்டு, கருணைப் பார்வைகொண்டு கடாட்சித்து அநுக்கிரகித்தல்வேண்டும்.

மேற்கூறிய அறுவகைத் தீட்சைகளினுலும் ஆணவமலம், மாயாமலம், கன்மமலம் என்னும் மும்மலாதிகளையும் தற்போதத்தையும், இரசம் செம்பினது களிம்பை யகற்றுவதுபோல் நீக்கி, 'சுடர்விளக்காயினும் தூண்டுகோல் வேண்டும்' என்பதற்கிணங்கத் தமது அருட்சத்தியிற் சிறிது உதவிச் சீடனிடத்தி லுள்ள இயற்கையான சத்தியைத்தூண்டி உபகாரம் புரியவேண்டும். பழுக்காத வாழைக்காய்கள் புகைமூட்டத்தால் நன்ருய்ப் பழுப்பதுபோல், அபக்குவர்களும் ஆசிரியரது திருநோக்கத்தால் பக்குவிகளாகி விடுவார்கள். இதற்குத் திருஷ்டாந்தமாவன:—

அல்லமாப்பிரபு என்னும் சிறந்த ஞானசிரியர், தூலசரீரமாகிய இவ்வுடம்பை மருந்தாதிகளாற் காயசித்தி பண்ணிச் செருக்கடைந்து சைலமலையாகிய பருப்பதமலையில் வாசஞ்செய்துகொண்டிருந்த கோரக்க முனிவருக்கு, அவர் செருக்கடங்கும் வண்ணம் சூக்கும சரீரத்தின் உயர்நிலையைக் காட்டி, அன்னவருக்குப் பிரம்ம நிட்டையை உபதேசஞ் செய்துவிட்டு; அந்த மலைக்கு அப்பால் யானை, புலி, கரடிகள் முதலான கொடிய மிருகங்கள் வசிக்கும் ஒரு பெரிய வனத்திற்குட் செல்லும் போது, கொலைத்தொழிலையே சீவனமாகக்கொண்ட ஒருவேடன் நாணேற்றிய வில்லில் அம்பு பூட்டியபடியே பிறர் கண்டு பயங்கரமுண்டாகும் வண்ணம் வந்து தோன்றினன்.

## நயனதீட்சை விபரம்.

அப்போது அல்லமதேவர், கண்ணிடந்தப்பிய வேடராய திண்ணனர் என்னும் கண்ணப்ப நாயனரைப்போன்ற பக்திமான்களுக்கு உபதேசித்து இன்பம் அடையச்செய்தல் கீர்த்தியன்று: கொலைபாதகனுகிய இந்த வேடனைத் திருத்துவதுதான் கீர்த்தியென்று நினைந்து மனமிரங்கி, அவன்மீது கிருபாநோக்கம் பாலித்தனர். உடனே வேடுவன், தன் சுபாவம் நீங்கி அதிதீவிர பக்குவம் அடைந்து, வில்லையும் அம்பையும் எறிந்துவிட்டு, சுவாமி! அடியேன் உய்வதற்கு வேண்டிய மார்க்கங்களை

போதித்தருளல் வேண்டுமென அடியற்றமரம்போல் விழுந்து அட்டாங்கமாக வணங்கினன்.

அப்போது அல்லமதேவர், வேடனை நோக்கி, அன்பனே! நீ அறிவென்னும் வேலாயுதத்தால் ஐம்புலன்களென்னும் மான் கூட்டங்களை அருளென்னும் வலையைவிட்டுத் தப்பாதபடி எறிகுவையாகில், உனக்குத் துன்பமில்லை. அன்றியும், நீ வில்லை வளைத்து அம்பைத் தொடுத்து மிருகங்களை எய்வதுபோல், அறிவை வில்லாகவும், மனதை அம்பாகவும் என்னைக் குறி வைத்து எய்வையாகில், உன்னைத் தேவர்களும் பணிவார்கள் என்று உபதேசம் செய்தருளினர் என்பது பிரபுலிங்கலீலைக் கருத்து.

## பரிசதீட்சை.

நபிகள் பெருமான் செய்யிதுல் ஹறமைன் ஷபீகுல்முதுநபீன் அகுமது முகம்மது முஸ்தபா இறசூல் சல்லல்லாகு அலைகிவசல்லம் என்னும் இஸ்லாமத ஸ்தாபகரும் தீர்க்கதரிசியுமாகிய நபிகள் நாயகம் அவர்களுக்கு வயது முப்பத்தெட்டு (38) பூரணமான காலத்து, ஆதிநாயகன் திருவுளக்குறிப்பின்படி ஓர் பிரகாசமானது, அவர்கள் கட்புலனுக்குத் தோற்றமாகி யூன்றிப் பார்த்தவுடன் மறைவதுமாயிருந்தது. இராக்காலத்திலும் பகற்காலத்திலும் ஆகாயமுதலான சகல திசைகளிலிருந்தும் தொனிகள் பிறந்துகொண்டிருந்தது. ஆனல் அத்தொனி பிறர்களுக்குக் கேட்காது: நாதமுங் குறையாது: ஓர் சொரூபமும் தோன்ருது. அதனல் நபிநாயகம் அவர்களுக்கு ஆனந்தமும் பயங்கரமும் ஆச்சரியமும் மாறிமாறி நிகழ்ந்தன.

(இன்னும் வரும்)

(வேதாந்த பாஸ்கரன்.)

---

## சங்கீதம்.

(209-ம் பக்கத் தொடர்ச்சி.)

---

ஒரு சங்கீத வித்துவான், காட்டுமார்க்கமாய் ஊர்ப்பிரயாணம் போகும்போது தாகம் அதிகரித்ததால் ஆட்டுமந்தை வைத்

துக்கொண்டிருந்த ஒரு இடையனைக் கண்டு, அவனிடம் பால் கேட்டு வாங்குவதற்காகச் சில கீர்த்தனங்களைக் கடவுள்மீது உருக்கமாகத் தாரை தாரையாகக் கண்ணீர்விட்டுப் பாடினான். அதைப் பார்த்த இடையனும் தாரை தாரையாய்க் கண்ணீர் விட்டு அழுதான். சங்கீத வித்துவான் அந்த இடையனை நோக்கி, ஏனப்பா அழுகிறாய் என்று கேட்டான். அதற்கு இடையன், நீர் நொண்டி, முடம், கிழமல்லவே, நல்ல யௌவனமும் அழகு முடைய பிராமணராய் இருக்கிறீரே. இத்தகைய உமக்கு நேரிட்டிருக்கிற ஆபத்தை நினைத்துத்தான் நான் அழுகிறேன் என்றான். அதற்குப் பாடகன், என்ன ஆபத்து என்று கேட்டான். இடையன், நேற்று விடியசாமம் முதல்கொண்டு சூரியோதயம் வரைக்கும் இப்படித்தான் ஒரு ஆடு கத்திக்கொண்டிருந்து தலைவீங்கிச் செத்துப்போயிற்று. அதுபோல் நீர் இப்போது ஒருநாழிகை நேரமாகக் கத்துகிறீர். இன்னும் ஐந்தாறு நாழிகை சென்றால் தலைவீங்கிச் செத்துப்போவீரே. உம்மை யெடுத்துப் புதைப்பதற்கு உபபலமாய் வேறே மனிதர் இங்கில்லையே யென்று விசனப்பட்டு அழுகிறேன் என்றான். பாடகன் வெட்கப்பட்டு, 'அருமை அறியாதவனிடத்தில் போனால் பெருமை குறைந்துபோகும்' என்ற பழமொழியை இவனிடத்தில் பிரத்தியட்சமாய்க் கண்டோம் என்று, சொல்லிக்கொள்ளாமல் அவ்விடம் விட்டு நீங்கினான்.

ஒரு அரசன் தன் குமாரனுக்கு இளவரசுப்பட்டம் கட்டினான். அப்போது அநேக சாஸ்திரிகளுக்குப் பரிசுகொடுத்தான். அவர்களிற் பலர் அரசனைப் புகழ்ந்து பாடிக்கொண்டு வந்தனர். கடைசியாகத் தர்க்க சாஸ்திரி, சங்கீத சாஸ்திரி, ஜோதிட சாஸ்திரி, வைத்திய சாஸ்திரி, இலக்கண சாஸ்திரி யாகிய ஐந்து சாஸ்திரிகள் ஒன்றுசேர்ந்து வந்தார்கள். அவர்கள் ஒன்றும் பாடிக்கொண்டு வரவில்லை. அவர்களோடு அரசனும் மந்திரியும் பேசிக்கொண்டிருக்கையில் ஒவ்வொருவரும் தம்மைத் தாமே புகழ்ந்துகொண்டனர். அதுகண்ட மந்திரி இரகசியமாய், அரசே! இவர்களை நமது சத்திரத்திற் போய்ச் சமைத்

துச் சாப்பிட்டு வரச்சொல்லுங்கள். பிறகு பரிசுகொடுக்கலாம் என்று சொன்னான்.

அரசன் சாஸ்திரிகளைப் பார்த்து, சாஸ்திரிகளே! நீங்கள் சென்று நமது சத்திரத்தில் சமைத்துச் சாப்பிட்டு வாருங்கள்! என்று சொல்லி, ஐந்து ரூபாய் அவர்களுக்குக் கொடுக்கும்படி கட்டளையிட்டான். சாஸ்திரிகள் அந்தத் தொகையைப் பெற்றுக்கொண்டு சத்திரத்திற்குப் போனார்கள்.

அவர்களில் வைத்திய சாஸ்திரி பதார்த்தம் வாங்கிவரவும், தர்க்கசாஸ்திரி நெய் வாங்கிவரவும், இலக்கண சாஸ்திரி தயிர் வாங்கிவரவும், ஜோதிட சாஸ்திரி இலைபறித்து வரவும், சங்கீத சாஸ்திரி அரிசி வாங்கிவந்து சமையல் செய்யவும் முறையேற் படுத்திக்கொண்டு தத்தம் வேலையைச் செய்துமுடிக்க ஆரம்பித் தார்கள். வைத்திய சாஸ்திரி பலவிதக் காய்கறிகள் குவிந்திருக் கும் பதார்த்தக் கடைக்குப்போய், என்ன பதார்த்தம் வாங்க லாம்! என்று நெடுநேரம் யோசித்தும் ஒன்றுந் தோன்றாமல், ஒவ்வொரு காயின் குணாகுணங்களையும் ஆராய்ந்து பார்க்க எண் ணிப் புத்தகக் கடைக்குப்போய், பதார்த்தகுண சிந்தாமணி யென்னும் புஸ்தகத்தை வாங்கி ஒவ்வொரு பதார்த்தத்திற்கும் சொல்லிய பாடலைப் படித்துப்பார்த்தார். அதில்,

### கொத்தவரைக்காயின் குணம்.

கொத்தவரைக் காய்பித்தம் கூடாது பத்தியத்தின்
மெத்தெனவும் ஐயம் விளைக்குங்காண்—பித்தத்தால்
சிதமகற்றி விடும் தின்மருந்தைப் பாழாக்கும்
வாதக் குடைச்சலுக்கு மால்.

### வண்டற்காயின் குணம்.

கண்ட கிராணி கடிய அதிசாரம்
விண்டவள சீதரத்தம் மேவுங்காண்—ஒண்டொடி
வண்டற்காய் வெய்யகப வாதமிகும் வாய்க்குணவாம்
வண்டற்காய் உண்பார்க்கு விள்.

### பாகற்காயின் குணம்.

பித்தமொடு வாதப் பெருக்கைமிக வுண்டாக்கும்
தத்து காப்பானைத் தருவிக்கும்—பற்றிரதத்
தாரை பாஷாணந் தமைமுறிக்கும் தப்பாது
காரைவல்லி யாம்பாகற் காய்.

### கத்தரிக்காயின் குணம்.

பண்டு மாண்ட கிரந்தியைப் பாலிக்கும்
உண்ட கைக்குந் தினவையுண் டாக்கிடும்
நண்டு கட்டுங் குரங்கென நாளுமாம்
கண்டுவிட்டது கத்தரிக்கா யதை.

என்று ஒவ்வொன்றுக்கும் குற்றம் சொல்லியிருந்தது. அதனால் ஒன்றும் வாங்காமல் திரும்பிவிட்டார்.

தர்க்கசாஸ்திரி கடைக்குப்போய் ஒரு தொன்னையில் நெய் வாங்கி வரும்போது, 'தொன்னைக்கு நெய் ஆதாரமா? நெய்க்குத் தொன்னை ஆதாரமா?' என்று யோசித்துப் புலப்படாமல் தொன்னையைக் கவிழ்த்துப் பார்த்தார். நெய் முழுதும் சிந்திப்போயிற்று. பிறகு நெய்க்குத் தொன்னைதான் ஆதாரம்! என்று தெரிந்துகொண்டார். நெய்போனாலும் போகிறது. இவ்வளவு பெரிய சந்தேகம் நீங்கிற்றே? இதை நமது சிநேகிதர்கள் கேட்டாலும் அதிக சந்தோஷப் படுவார்கள்! என்று எண்ணிக்கொண்டே வந்தார்.

இலக்கண வித்துவான் தயிர் வாங்கப்போனார். ஒரு வீதியில் தயிர்விற்கும் இடையன், 'தயிரோ ஓ ஓ தயிரு! தயிரோ ஓ ஓ தயிரு!' என்று கூவினான். அதைக்கேட்ட வித்துவான், இதென்ன அநியாயமாயிருக்கிறது. 'மூன்றுயிரள பிரண்டாம் நெடில்' என்னும் நன்னூற் சூத்திர விதியின் மாத்திரை அளவின்படி ஓகாரத்தை இரண்டு மாத்திரை தானே உச்சரிக்க வேண்டும். இவன் உச்சரிப்பது இருபது மாத்திரைக்கும் அதிகப்படுமே. இலக்கணம் தவறினவனிடத்தில் தயிர் வாங்கக் கூடாது என்று,

ஆவியும் ஒற்றும் அளவிறந் திசைத்தலும்
மேவும் இசைவிலி பண்டமாற் றாதியின்.

என்னும் நன்னூலின் மாத்திரைச் சிறப்பு விதியை நன்குணரா மல் வந்துவிட்டார்.

ஜோதிட சாஸ்திரி இலை பறிப்பதற்காக மரத்தில் ஏற ஆரம் பிக்கும்போது, ஒரு பல்லி 'கிச்சு கிச்சு' என்று சொல்லிற்று. அதைக்கேட்ட ஜோதிடர், ஓஹோ! இதென்ன! ஆபத்துக்கு இடமாக யிருக்கிறது. 'தலைக்குமேல் பல்லிசொன்னால் தட்டா மல இராஜ விரோதம் உண்டாகும்.' இலையில்லாமற் போனாலும் போகிறது என்று திரும்பிவிட்டார்.

சங்கீத வித்துவான் கடைக்குப்போய் அரிசியும் பானையும் வாங்கிவந்து அடுப்பு மூட்டி, அரிசியைக் கழுவி உலையிலிட்டார். சிறிதுநேரத்தில் சாதம் தளபள என்று கொதிக்கத் தலைப்பட் டது. உடனே உலக்கைக் கொழுந்துபோல் புத்திக் கூர்மை யுள்ள சங்கீத வித்வசிகாமணியானவர், ஆஹா! இந்தத் தாள வரிசை நன்றாய் இருக்கிறது என்று ஒரு பாட்டுப்பாட ஆரம் பித்தார். அப்போது தாளம், அடுப்பு எரிகிற உஷ்ணத்திற்குத் தக்கபடி திசரமாகவும், சதுரசிரமாகவும், மிசிரமாகவும், கண்ட சாதியாகவும், சங்கீரணமாகவும்,

(இன்னும் வரும்)

(ஞானக்களஞ்சியம்)

---

## ஒ ழு க் க ம்.

---

ஒழுக்கம் உயர்குலத்தினன்று.

ஒழுக்கமானது யாவர்க்குஞ் சிறப்பைத் தருகின்றதாதலால் அதை உயிரைப் பார்க்கிலுஞ் சிறந்ததாகக் கருதி அதற்கிடையூ றில்லாமல் நடத்தவேண்டுமென்பதை யுணர்ந்தவர்களே ஒழுக்க முடையவர்கள். இக்கருத்திற் கிணங்க நமது தெய்வப்புலமை வாய்ந்த திருவள்ளுவர் திருவாய்மலர்ந்தருளிய செய்யுளால் தெளிக.

ஒழுக்கம் விழுப்பந் தரலான்
ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்.

இம்மை மறுமைக்குத் துணையாகவிருக்கும் தர்மமேது வென்று பல நூல்களையு மாராயுமிடத்து ஒழுக்கமே முக்கிய மெனச் சொல்லியிருக்கின்றமையால், அவ்வொழுக்கத்தை எவ் விதத்திலும் தப்பிப் போகவொட்டாதபடி காப்பாற்றவேண்டும்.

பரிந்தோம்பிக்காக்க ஒழுக்கந்
தெரிந்தோம்பித் தேரினும், அஃதேதுணை.

சாதி யாசாரத்திற்குத் தக்க வொழுக்கத்தை யனுசரித்து நடத்தலால் நல்ல குலத்தனுவானென்றும், அவ்வொழுக்கத் திற்கு விரோதமாய் நடப்பவன் இழிகுலனுவானென்றும் பல நூலிலும் விதியாகச் சொல்லப்பட்டிருக்கின்றது.

நன்றிக்கு வித்தாகு நல்லொழுக்கந்
தீயொழுக்கம் என்றும் இடும்பைதரும்.

வேதியர்க்கழகு வேதமும்ஒழுக்கமும்.

பிராமணன் வேதத்தை மறந்துவிடுவானுனுலும் மறுபடி யுங் கற்றுக்கொள்ளலாம். ஒழுக்கத்தை விட்டுவிட்டால் அவ னது உயர்ந்த சாதித்தன்மை கெடுமேயல்லது உயர்வாகமாட் டாது. பொருமை யுடையவனிடத்துச் செல்வம் நிலையாது போலவே நல்லொழுக்க மில்லாதவனிடத்து மேன்மை நிலைத் திருக்க மாட்டாது.

அழுக்காறுடையான்கண் ஆக்கம்போன்றில்லை
ஒழுக்கம்இலான்கண் உயர்வு.

ஒழுக்கத்தை விட்டால் இழிகுலத்தனுக வேண்டுமென் றறிந்த புத்திமான்கள் அவ்வொழுக்கத்திலிருந்து சிறிதும் வழு வார்கள். நல்லொழுக்கத்தால் சிஷ்டத்வமும் அஃதில்லாமையால் பிரஷ்டத்வமும் உண்டாகுமென்பதற்கு பிரமாண மென்னவெ னில் நன்மைக்கெல்லாம் மூலம் ஒழுக்கமென்றும் தீமைக்கெல் லாம் மூலம் ஒழுக்கமில்லாமையென்றும் சொல்லப்பட்டிருப்பது வேயாம். ஒழுக்கமுடையவர்கள் தங்கள் சாதிக்குங் குலத்துக் குந்தகாத பொய் முதலியவைகளை மறந்து நீக்கிவிடுவார்கள். ஒருவேளை நீக்காமலிருப்பார்களாகில் நல்லொழுக்கமில்லாத நீச ரெனப்படுவதற்கு சந்தேகிக்க வேண்டுவதில்லை.

கல்விக்குப்பயன் அறிவு; அறிவுக்குப்பயன் ஒழுக்கம். இவ்வொழுக்கத்தையுணர்ந்து நடக்கக் கல்லாதவர்கள் பல நூல்களைக் கற்றும் அறிவிலாரென்றே சொல்லப்படுவார்கள்.

இக்கருத்து நோக்கியே நாயனர் வாக்கு எழுந்ததுபோலும்.

உலகத்தோ டொட்ட ஒழுகல்
பலகற்றுங், கல்லார் அறிவிலாதார்.

ஆதலால் யாவரும் ஒழுக்கத்தை மேற்கொண்டு நடக்கவேண்டும்.

S. மெய்கண்ட பிள்ளை, விளமல்.

---

## வாக்குவாதம்.

### ஞானசம்பந்தம் பிள்ளை என்ற ஓர் சைவ சித்தாந்திக்கும் தங்கசாமி பிள்ளை என்ற ஓர் வேதாந்திக்கும் ஏற்பட்ட சம்பாஷணை.

---

தங்க:—வேதாந்தத்திற்கும் சித்தாந்தத்திற்கும் பேதமுண்டா?

ஞான:—வேதாந்தம் வேதத்தின் முடிவு; சித்தாந்தம் ஆகமத்தின் முடிவு. வேதம், ஆகமம் இரண்டும் கடவுளால் ஏற்பட்டது. எப்படி வித்தியாசமாய் கூறுவர்.

தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும்—கோவை
திருவா சகமும் திருமூலர் சொல்லும்
ஒருவா சகமென் றுணர்.

மேற்சொன்ன இவ்வளவும் ஒரே வாசகமென்று ஔவை பிராட்டியாரால் கூறியுள்ளது.

'வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்ற வித்தகச் சித்தர் கணமே' யென்று நமது தாயுமானவள்ளலும் கூறியிருக்கின்றனர். இப்படியே திருஞான சம்பந்தப் பெருமான் கண்ணுடைய வள்ளலுக்கு ஒழிவிலொடுக்கமென்ற ஞானசாஸ்திரத்தில் இரண்டும் சமமென்று வற்புறுத்திச் சொல்லுகிறார். திருஷ்டாந்தம் பின்வரும். அப்படியிருக்க, பேதம் கூறுவது அறியாமையே.

தங்க:—அப்படியானல் சித்தாந்தத்தில் சொல்லி யிருப்பதும் வேதாந்தத்தில் சொல்லி யிருப்பதும் ஒத்திருக்கவேண்டுமே?

ஞான:—யாதொரு வித்தியாசமுமில்லை. அப்படி வித்தியாசப்பட்டால் பெரியவர்கள் வாக்கும், வேதமும் ஆகமும் கடவுளால் சொல்லப்பட்டதென்பதும் பொய்யாகும்.

தங்க:—அப்படியானல் எனக்கிருக்கும் கேள்விகளைக் கேட்டு என் சந்தேகங்களை நிவிர்த்தி செய்தல் வேண்டும்?

ஞான:—வேதாந்தத்தை குருவன்றியில் விசாரிக்கும் பக்ஷத்தில் மோசமான தப்பார்த்தங்கள் கொள்ளும்படி ஏற்படக்கூடியது. அதுகாரணம் பற்றியே வேதத்தை மறைத்துவைத்தது. வேதாந்தத்தையும் சித்தாந்தத்தையும் சமரசமாய்க் கொள்பவர் சிலர்; தப்பார்த்தங்கொள்பவர் பலர்; ஆகையால் உங்களுக்கு எவ்வளவு சந்தேகமிருந்தாலும் எல்லாவற்றையுங் கேட்டுவிடுங்கள். பதில் சொல்லுகிறேன்.

தங்க:—சித்தாந்தத்தில் பசு, பதி, பாசம் மூன்று பதார்த்தம் சொல்லி மூன்று மனுதியென்றே கூறுகின்றது. வேதாந்தத்தில் பிர்மம் ஒன்றே சொல்லப்பட்டு அதுவே நித்தியம் என்று கூறியுள்ளது. சித்தாந்தத்தில் ஆன்மாக்கள் அனந்தமென்றும் அவைகள் முத்தி நிலையிலும் அனுதியாயிருக்கிறதென்றும் கூறியுள்ளது. வேதாந்தமோ பிர்மம் ஒன்றே நித்தியம் என்று சொல்லுகின்றது. சித்தாந்தம் மாயை பிர்மத்தில் அனுதியாயிருக்கிறதென்றே கூறும். வேதாந்தமோ பிர்மம் ஒன்றே நித்தியம் என்று கூறும். சித்தாந்தமோ ஆன்மாவே நானென்று கூறும். வேதாந்தம் நானே பிர்மமென்று கூறும். இதற்குப் பதில் சொன்னல் பின்னல் வேறு கேள்விகளைக் கேட்டுக்கொள்ளுகிறேன். (இன்னும் வரும்)

R. பாப்பு பிள்ளை, விஜயபுரம்.

## The Poor Life and the Troublesome Belly.
## ஏழை உயிரும் பாழும் வயிறும்.

சேவித்துஞ் சென்றிரந்துந் தெண்ணீர்க் கடல்கடந்தும்
பாவித்தும் பாராண்டும் பாட்டிசைத்தும்—போவிப்போம்
பாழின் உடம்பை வயிற்றின் கொடுமையால்
நாழி யரிசிக்கே நாம்.

1. உடலிலுள்ள பாகங்களில் மிகுந்த துன்பத்தை உண்டு பண்ணுவது பாழும் வயிறே. உயிர் எங்கெங் கிருக்கின்றதோ வயிறும் அங்கங்கு நின்று உயிரை எமனைப்போல் வருத்துகின்றது. இப்பாழும் வயிற்றைப்போல் கொடியது எங்குமில்லை. இவ்வுலகிலுள்ள எண்பத்துநான்கு இலட்சம் சீவராசிகளும் தாங் கொணு அவத்தை அடைவது இப்பாழும் வயிற்றின் பொருட்டே.

2. உத்தியோகஞ் செய்து மேலதிகாரிக்குக் கைகட்டி வாய் பொத்தி அவனிடும் வேலைகளைச் சரிவரச்செய்து அவனுக்கு அடிமையாவது இப்பாழும் வயிற்றின் பொருட்டே. ஏழைக் குமாஸ்தாவானவன் காலைமுதல் மாலைவரையில் மேஜையடியில் உட்கார்ந்து தலைநிமிராது எழுதுகோல் கொண்டு மைக்கூட்டினிடமும் காகிதத்தினிடமும் உயுத்தம் செய்வது இவ்வுலுத்த வயிற்றின் பொருட்டே. *ஏழைக் கூலிக்காரன் அதிகாலையில் எழுந்து கூலிவேலைக்காகத் தெருவுகடோறும் அலைந்து திரிந்து

---

* குறிப்பு:—காரியஸ்தர்கள் இரவும் பகலும் உழைத்தும் அதற்குத் திருப்தியுடையாமற் சில பிரபுக்கள் அவர்களை மென்மேலும் துன்புறுத்தி அதிக வேலைவாங்க அதைச் சகிக்காமல் வேலையினின்றும் விலகிக்கொள்ள மனச்சாட்சி வற்புறுத்தினும் வேறு கதியில்லாமையால் அவ்வேழைக் காரியஸ்தர்கள் மெய் வருத்தம் பாராமலும் கண்துஞ்சாமலும் கருமமே கண்ணாகக் கொண்டு எல்லாத் துன்பங்களையும் சகித்து அவர்களுக்கு அடிமையாவதும் இவ்வன்பற்ற வயிற்றின்பொருட்டே.

(பத்திராதிபர்.)

மிக்க சிரமத்துடன் வெய்யில், மழை பாராது தேகத்தைக் கண்டித்து வேலை செய்வதும் இந்த வேகும் வயிற்றின்பொருட்டே. குடியானவன் வெள்ளி முளைப்பதற்கு முன்பு தனதிரு எருதுகளும் முன்னடக்கத் தனது தோளில் கலப்பையை எடுப்பித்துக் கொண்டு வயலுக்குச் சென்று அங்கு சேற்றிலும் நீரிலும் உழன்று குளிர், வெய்யில் இவைகளைப் பொருட்படுத்தாது மாலைவரை நெற்றிவேர்வை நிலத்தில்விழ மிக்க சிரமப்படுவது இச்சீர்கெட்ட வயிற்றின் பொருட்டே. சகிக்கொணு துர்க்கந்தத்தைச் சகித்து ஏழைகள் தெருக்கடோறுஞ்சென்று அசுத்தங்களை அள்ளிச் செல்வதும் இவ்விரமிலா வயிற்றின் பொருட்டே.

3. பிச்சைக்காரர்கள் இரவும் பகலும் தெருவுகடோறும் அலைந்துதிரிந்து பல்லைக்காட்டிக்கெஞ்சிக் கூத்தாடி பலகோரணிகள் செய்தும், தேகத்தைக் கத்தியால் வெட்டி இரத்தத்தை ஒழுக விட்டுக்கொண்டும், கல்லால் அறைந்துகொண்டும் தன் தேகத்தை உபத்திரவித்து இரப்பது இடும்பைகூர் வயிற்றின் பொருட்டே.

4. கடல்கடந்து அன்னிய தேசஞ்சென்று ராணுவத்திற் சேர்ந்து உயிரையும் மதியாது யுத்தம்செய்து உயிர்நீத்தலும் கடல்கடந்து அன்னியதேசஞ் சென்று பூலோக நரகமென்னும் தேயிலை, ரப்பர் தோட்டங்களில் வேலைசெய்து ஏழை ஸ்திரீகள் கற்பழிக்கப்படுவதும் ஏழைகள் துன்புறுத்தப்படுவதும் இவ் வெட்கங்கெட்ட வயிற்றின் பொருட்டே.

5. "உதரநிமித்தம் பஹுகிருத வேஷம்" என்றபடி மனத் தூய்மை இல்லாதோரெல்லாம் வெளித்துறவி வேடம்பூண்டு,

கையொன்று செய்ய விழியொன்று நாடக் கருத்தொன் றெண்ணப்
பொய்யொன்று வஞ்சக நாவொன்று பேசப் புலால் கமழு
மெய்யொன்று சாரச் செவியொன்று கேட்க.

என்றபடி நிஷ்டையில் நிலைத்திருப்பவர்போல் பாசாங்கு செய்து சாதுக்களை மயக்கி, பொருள்பறித்து சுகஜீவனஞ் செய்யத் தொடங்குவதும் இவ்வனித்திய வயிற்றின் பொருட்டே.

6. ஏழைக் குடிகளைக் கெடுத்து அவர்கள் பொருள்களைப் பறிக்க ஒன்றுக்கிரண்டு இலாபம் வரும்படி சரக்குகளை விற்று பாபத்தை மூட்டை கட்டுவதும் இவ்வஞ்சக வயிற்றின்பொருட்டே. ரயில்வேஸ்டேஷனிலுள்ள போர்ட்டர்கள் ஒரேசமயத்தில் தாங்கொணா சுமையைச் சுமந்துசெல்வது இச்சுமைமிகுந்த வயிற்றின்பொருட்டே. நாவல்களென்னும் சிற்றின்ப நூல்களை வரைவதும் வன்மையிலா வயிற்றின்பொருட்டே. மந்திரம் முதலியவைகளைச் செய்து பேயோட்டுவதெல்லாம் வயிற்றுப்பேயின் பொருட்டே. கோடிவித்தையும் கூழுக்கே (The belly teaches all arts) ஞானமும் கல்வியும் நாழியரிசிக்கே என்னும் பொய்யாமொழிகள் ஏற்பட்டது இப்பொய்மைநிறை வயிற்றின்பொருட்டே கொலை புலைகளை விரும்பி ஜீவகாருண்ய ஒழுக்கத்தினின்றும் தவறுவதும் இம்மூர்க்க வயிற்றின் பொருட்டே. காதல், கவருடல், கள்ளுண்ணல், பொய் மொழிதல், ஈதல், மறுத்தல் இவை அனைத்தும் விருத்திசெய்வது தீமைநிறை வயிற்றின் பொருட்டே.

7. காட்டு மிருகங்கள் ஒன்றை ஒன்று எதிர்த்துக் கொல்வதும் மாமிச வயிற்றின்பொருட்டே. எருதுகள் காலை முதல் மாலை வரை வண்டியிலோ, ஏரிலோ, செக்கிலோ பூட்டப்பட்டு மிகவும் துன்புறுவது இவ்விபரீத வயிற்றின்பொருட்டே. எறும்புகள் சாரை சாரையாக ஊர்ந்துசெல்வது இவ்வனியாய வயிற்றின் பொருட்டே. தேனீக்கள் ஒரு புட்பத்தினின்று மற்றொரு புட்பத்திற்கும் பின்பு அப்புட்பத்தினின்றும் வெகு தூரத்திலும் வேறொரு புட்பத்திற்கு சென்று தேனைச் சேகரிப்பதும் அப்படி அவைகள் மிக்க சிரமப்பட்டு சேகரித்ததேனை மானிட மிருகங்கள் அபகரித்தலும் இத்திருட்டு வயிற்றின்பொருட்டே. பக்ஷிகள் கூட்டங் கூட்டமாய் வெளிக்கிளம்பி ஆகாயத்தில் சஞ்சரிப்பதும் இச்சஞ்சல நிறைவயிற்றின் பொருட்டே. ஜட்காவில் பூட்டிய குதிரைகள் குடல்தெரிக்க ஓடுவதும் இக்குணமிலா வயிற்றின் பொருட்டே.

8. யாரைவிட்டது இப்பாழும் வயிறு!

பற்றறத் துறந்த ஞானப் பட்டினத் தடிகள்போல
பற்றறத் துறந்தே னில்லை. (சிவஞான வள்ளல்)

பாரனைத்தும் பொய்யெனவே பட்டினத்துப் பிள்ளையைப்போல்
ஆருந் துறக்கை யரிது. (தாயுமான வள்ளல்)

என புகழப்படும் பற்றறத்துறந்த ஞானப் பட்டினத்தடிகளும் கேவலம் ஓர் மூர்க்கனால் நையப் புடைக்கப்பட்டது துன்பமான வயிற்றின் பொருட்டே.

பூணும் பணிக்கல்ல பொன்னுக்குத் தானல்ல பூமிதனைக்
காணும் படிக்கல்ல மங்கையற் கல்லநற் காட்சிக்கல்ல
சேணுங் கடந்த சிவனடிக் கல்லவென் சிந்தைகெட்டு
சாணும் வளர்க்க அடியேன் படும்துயர் சற்றல்லவே.

எனப் பட்டினத்தடிகள் நொந்ததும் இரக்கமில்லா வயிற்றின் பொருட்டே.

"தினமிருந்து நீதுய்க்கச் சோறுமனை தோறுமுண்டு"
"அன்ன விசாரம் அதுவே விசாரம்"
"இரைக்கே இரவும் பகலும் திரிந்திளைத்து"
"இல்லந்துறந்து பசிவந்த போதங் கிரந்துதின்று"
"கையார வேற்றுநின் றங்ஙனந் தின்று"
"பசித்து வந்தாற் கொடுக்க சிவனுண்டு"

அத்திமுத லெறும்பீ றானவுயிர் அத்தனைக்குஞ்
சித்தமகிழ்ந் தளிக்குந் தேசிகா—மெத்தப்
பசிக்குதையா பாவியேன் பாழ்வயிற்றைப் பற்றி
பசிக்குதையா காரோண ரே.

என பற்றறத் துறந்த பட்டினத்துப் பிள்ளையார் *பசியைத் துறக்க முடியாமற் பரிதபித்தது இப்பாதக வயிற்றின்பொருட்டே.

---

* மஹாத்துமாக்கள் ஆயிரக் கணக்கான வருடங்கள் பசிப்பிணியை நீக்கி ஆத்ம நிஷ்டையி லிருப்பார்கள். பட்டினத்தடிகளும் ஓர்சமயம்,

இருக்கு மிடந்தேடி என்பசிக்கே அன்னம்
உருக்கமுடன் கொண்டுவந்தால் உண்பேன்—பெருக்க
அழைத்தாலும் போகேன் அரனே என்தேகம்
இளைத்தாலும் போகே னினி.

9. தமிழ் என்னும் சாகரத்தை மடுத்த ஔவையார் கூழுக்குப் பாடியது இக்கொடிய வயிற்றின் பொருட்டே.

> ஒருநா ளுணவை ஒழியென்றா லொழியாய்
> இருநாளைக் கேலென்றா லேலாய்—ஒருநாளும்
> என்னோ வறியா யிடும்பைகூர் என்வயிறே
> உன்னோடு வாழ்த லரிது.

என ஔவையார் இகழ்ந்துரைத்தது இன்பமிலா வயிற்றின் பொருட்டே.

> 10. போற்றினும் போற்றுவர் பொருள் கொடாவிடில்
> தூற்றினுந் தூற்றுவர் சொன்ன சொற்களை
> மாற்றினும் மாற்றுவர் வன்க ணாளர்கள்
> கூற்றினும் பாவலர் கொடிய ராவரே.

என்றுரைக்கப்பட்ட பாவலர்களில் தலைமைபெற்ற கம்பர்,

> செட்டிமக்கள் வாசல்வழி செல்லோமே செக்காரப்
> பொட்டிமக்கள் வாசல்வழிப் போகோமே—முட்டிபுகும்
> பார்ப்பாரகத்தை யெட்டிப் பாரோமே எந்நாளும்
> காப்பாரே வேளாளர் காண்.

என வேளாளர்களை உயர்த்தியும் மற்றவர்களைத் தாழ்த்தியும் பாடியது இந்த அல்லல் மிகுந்த வயிற்றின்பொருட்டே.

11. வித்வ சிரோன்மணிகளாகிய இரட்டையர்கள், திருவனந்த புரத்திற்குச் சமீபத்திலுள்ள ஆங்கூர்ச் சிவன்கோவில் சென்று பசியால் மிக வருந்தி,

---

> வாசற்படி கடந்து வாராத பிச்சைக்கிங்
> காசைப் படுவதில்லை அண்ணலே.

எனக் கூறியுள்ளார். ஆகையால் முற்றும் துறந்த அவர் பசியைத் துறக்க முடியவில்லை என இழிவாகக் கூறினதாகக் கருதுதல் கூடா. பற்றறத்துறந்த ஞானப் பட்டினத்தடிகளையுங் கூட ஓர் காலத்தில் இப்பொல்லாத வயிறு சனியனைப்போல் பீடித்து அவரைத் துன்பக்கடலில் ஆழ்த்தியது என்பதைக் கூறவே இங்கு குறிப்பு.

தேங்குபுகழ் ஆங்கூர்ச் சிவனே! சில்லாளியப்பா
நாங்கள் பசித்திருக்க ஞாயமோ.

என அரை வெண்பாவைப்பாட அதற்குச் சிவபிரான்,

—போங்காணும்

கூறுசங்கு தோல்முரசு கொட்டோசை யல்லாமல்
சோறுகண்ட மூளியார் சொல்.

எனப் பாடியதைக் கேட்டதும் இப்பாழும் வயிற்றின்பொ ருட்டே,

12. சீராடை யற்ற வயிரவன் வாகனஞ் சேரவந்து
பாராரு நான்முகன் வாகனந் தன்னைமுன் பற்றிக்கௌவி
நாரா யணனுயர் வாகன மாயிற்று நம்மைமுகம்
பாரான்மை வாகனன் வந்தே வயிற்றினிற் பற்றினனே.

என அந்தகக்கவி வீரராகவ முதலியார் வருத்தமுற்றது இப் பாழும் வயிற்றின் பொருட்டே.

13. மேற்சொன்ன உதாரணங்களால் இப்பாழும் வயிற் றின் கொடுமைகள் நன்கு புலனாகும். இப்பாழும் வயிறு முற் றும் துறந்த முனீஸ்வரர்களையும் பீடிக்கிறதென்றால் சாதாரண நம்போன்ற ஏழை உயிரானது இப்பாழும் வயிற்றினால் படும் பாட்டை சொல்லவொண்ணாது.

மானங் குலங்கல்வி வண்மை யறிவுடைமை
தானந் தவமுயற்சி தாளாண்மை—தேனின்
கசிவந்த சொல்லியர்மேற் காமுறுதல் பத்தும்
பசிவந் திடப்பறந்து போம்.

என்றபடி, மானம், குலம், கல்வி, வண்மை, அறிவுடைமை, தானம், தவம், உயர்ச்சி, தாளாண்மை, காமம் இப்பத்தும் பாழும் வயிற்றினால் சிதறி யடிக்கப்படுகின்றன. என்றால் இப் பாழும் வயிற்றின் கொடுமை எவரோ சகிக்கவல்லவர்.

14. ஆகையால் இப்பாழும் வயிற்றினின்றும் ஏழை உயி ரைக் காப்பது ஒவ்வொரு சீவகாருண்ய சீலர்களின் முக்கிய கடமையாகும்.

V. சேஷாத்திரி, விளமல்.

## அன்னதானப் பெருமை.

அரிதினுமரிதாகிய மானிடப்பிறவியை எடுத்தவர்கள் இப்பிறவிதப்பினல் எப்பிறவி வாய்க்குமோ என்பதை நன்குணர்ந்து தான தருமங்களைச் செய்து கருணையங்கடலாகிய இறைவன் திருவடியை அடையவேண்டும்.

### ஸ்ரீதாயுமான வள்ளல்.

தானந்தவந்தருமஞ் சந்ததமுஞ்செய்வர்சிவ
ஞானந்தனையனைய நல்லோர்பராபரமே.

என்பதனல் தானமுஞ்செய்து அருளைப் பெறவேண்டும். அன்னம் செய்து பெறுவதற்கு சாதனமான புண்ணியவகை பலவகைப்படும். அவை தர்மம், அர்த்தம், இச்சை, வெட்கம், ஆனந்தம், பயம் என்னும் ஆறும். இவற்றுள் மேகத்தைப்போலும், கற்பகத் தருவைப்போலும், பிரதி பிரயோசனத்தை விரும்பாமல் நல்லோர்களுக்குக் கொடுப்பது. (ஒரு பிரயோசனத்தைத் தான் அடையக்கருதி பிறருக்குக் கொடுப்பது. இச்சையென்பது) (ஸ்திரீகள், வேடிக்கை யிவைகளை யுத்தேசித்துக் கொடுப்பது. வெட்கம்) பலர் கூடிய சபையில் யாசகரால் புகழப்படுவதற்கு பிறருக்குக் கொடுப்பது ஆனந்தம்) தன்னிடத்திலுள்ள பொருளைக் கண்டாவது கேட்டாவது விரும்புவோர்க்கு அப்பொருளை சந்தோஷத்துடன் கொடுப்பதாம். (பயம் விரோதிகளுடைய இம்சைக்குப் பயந்து அதினின்றும் தப்பித்துக் கொள்வதற்காகக் கொடுப்பது) பயம் இவற்றினுள், தர்மம் ஆனந்தம், என்பன மிகவும் உத்தமம். மற்றவை அதமம், அன்றியும் பிறர்படுந் துன்பத்தைக்கண்டு அத்துன்பத்தை நீக்கும்பொருட்டு தானகவே இரக்கத்தினல் கொடுப்பது இதுதான் எல்லாவற்றிலும் சிறந்தது.

இவற்றில் முக்கியமான புண்ணியவகை நான்கு. அவை, தானம், கல்வி, தவம், ஒழுக்கம் என்பன. அவற்றுள் முதற்கண் உள்ளதானம் இருபத்தைந்து (25) வகைப்படும், அவை

அன்னதானம், பூதானம், கோதானம், வித்தியாதானம், சுவர்ண தானம், கன்னிகாதானம் முதலியனவாம். அத்தகைய தானம் தலைப்படுதானம், இடைப்படுதானம், கடைப்படுதானம் என மூவகைப்படும். உத்தமவழியில் சம்பாதித்த பொருளைச் சிவஞானச் செயலுடையாரை ஏற்றுக்கொள்ளுமாறு குறையிறந்து உள்ளன்போடு கொடுத்தல் மகேசுவர பூசையாகும், அவ்விடத்தில் மகேஸ்வர மூர்த்தியே எழுந்தருளுவார் அவர்களிடத்தில் வானோர்முதல் யாவரும் வணங்குவதுந் தவிர என்றுமழியாப் புதவியையும் பெறலாம்.

வித்தக வேடத்து மெய்ஞ்ஞானி யுண்டவூண்
அத்தன் திருமால் அயனுக்கங் காகிடும்
வைத்த பரிகலம் வானோர் வணங்குவர்
சத்தியஞ் சொன்னோம் சதாநந்தி ஆணையே. (திருமூலதேவர்)

எனத் திருவாய்மலர்ந் தருளியதற் கிணங்க, இவ்வித தானமே தலைப்படுதானம். குருடர், செவிடர், முடவர் முதலியோர் சிறுமையை நோக்கி, மனமிரங்கி கொடுத்தலே இடைப்படுதானம் புகழ், பகை, பகைவரச்சம், பட்சம், மரியாதை, காரணம், இழிவு முதலிய இவைகளை முன்னிட்டுக் கொடுப்பது கடைப்படுதானமெனப்படும்.

முப்பத்திரண்டு அறங்களினுள்ளே முதற்கண் ஆதுலர்க்குச்சாலை, அதாவது ஏழைகட்கு அன்னமளிக்குமிடம். அத்தகைய அன்னதானமே மிக மேம்பாடுடையதாகும்.

அன்னதானந்தனக்குமே லானதானமிலைகோற
லன்னமேனும்விரும்பாத தவத்தின்மேலாந்தவமில்லை
பன்னுதெய்வங்களுண்முக்கட் பகவன்மேற்றெய்வமில்லை
மன்னுதவத்தீரிவைபோலம் மனுவின்மேலாமனுவில்லை.
(சூதசங்கிதை)

கரிபரியாயிரங்கள் கனத்தகோதானம்பூமி
பரிவொடுரசிதசொர்ண பாத்திரம்பணமாமென்று
விரிகுலமொத்தகன்னி கோடிதானீந்திட்டாலும்
அரிதிதுவென்றேயன்ன தானமேயதிகமாமே. (நீதிசாரம்)

வ. ம. சோமசுந்தரன், திருவிடைமருதூர்.

## மதிப்புரைகள்.

தாருல் இஸ்லாம் :—நாச்சியார்கோவில் (முஸ்லீம் சங்கத்தாரால் வெளியிடப்பெறும்) இச்செந்தமிழ்ப் பத்திரிகையில் இஸ்லாத்தின் தத்துவங்களெல்லாம் உள்ளது உள்ளபடியே தெள்ளிய நடையில் வெளியிடப்பெறுகின்றன. இலாபத்தை அடைய வேண்டுமென்னும் எண்ணம் சிறிதுமின்றி இஸ்லாத்தின் முன்னேற்றத்திற்காக இச்சங்கத்தார் உழைத்து வருவதால் ஏழைகளும் தனவந்தர்களுமாகிய ஹிந்து முஸ்லீம்கள் இதை ஆதரித்துவரின் மனிதராகப் பிறந்ததின் பயனை எளிதில் அடையலாமென்பதற் கையமில்லை.

வருடசந்தா ரூ 3—0—0

குமரன் :—இது சமய முன்னேற்றத்தையும், தமிழின் வளர்ச்சியையும் முக்கிய நோக்கமாகக்கொண்டு காரைக்குடி திரு. சொ. முருகப்ப செட்டியாரவர்களால் கிளேஸ்கடிதத்தில் வெளியிடப்பெறும் ஓர் அழகிய இனிய மாதாந்த செந்தமிழ்ப் பத்திரிகை. இப்பத்திரிகையை வாங்காதவர்கள் வாஸ்தவத்தில் துர்ப்பாக்கியர்களே. சமயக் கல்வி, தமிழக்கல்வி குன்றிய இக்காலத்தில் இத்தகைய பத்திரிகை வெளிவந்துலாவுவதானது தமிழ்நாட்டுக்கு எதிர்பாராத ஓர் பெரிய அதிர்ஷ்டமென்றே சொல்லவேண்டும். வருட சந்தா ரூ. 1—8—0

விநோத விகடன் :—காலத்திற்குத் தக்கபடி விகடங்களின் மூலமாய் விவேகத்தையும், தமிழின் வளர்ச்சியையும், நவீன நாகரீகத்தின் கெடுதல்களையும், சன்மார்க்க நெறிகளையும் போதிக்கும் ஓர் இனிய மாதமிருமுறை வெளிவரும் பத்திரிகை. மானிடரென்று கருதப்படும் ஒவ்வொருவரும் வாங்கி வாசிக்கவேண்டியது அத்தியாவசியம்.

வருட சந்தா ரூ. 3—0—0

கிருஷிகமித்திரன் :—சென்னை அடையாரினின்றும் வெளிவரும் இப்பத்திரிகையில் பயிரிடும் வகை, பயிரைக் காப்பாற்றும் விதம், கூட்டுறவு முதலிய இன்னும் கிருஷிகர்கள் அறியவேண்டிய அரும் பெரும் ரகசியங்கள் நன்கு விளக்கப்பட்டிருக்கின்றன. இப்பத்திரிகைக்கு கிருஷிகர்கள் மிகவும் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

வருட சந்தா ரூ. 3—0—0

தெய்வபக்தன்:—கும்பகோணத்தினின்று மாதம் ஒருமுறை வெளிவரும். இப்பத்திரிகை பெயருக்கேற்ற விஷயங்களுடன் வெளிவரும் என நினைக்கிறோம். வருட சந்தா ரூ. 3—0—0

லோகோபகாரி :—பொன்னேபோற் போற்றத்தக்க வேதாந்த வியாசங்களும், மற்ற பொது விஷயங்களும் இனிய செந்தமிழ் நடையில் எழுதப்பெற்று வியாழன் தோறும் வெளிவரும் ஓர் அரிய பத்திரிகை. தமிழறிந்த ஒவ்வொருவரும் இதனை ஆதரிக்கவேண்டும்.

வருட சந்தா ரூ. 4—0—0

நியாயாபிமானி:—காரைக்காலினின்றும் பிரதி புதவாரந்தோறும் பிரசுரமாகும். இப்பத்திரிகையில் பெயருக்கேற்ப நியாயத்தியே அபிமானித்து அரும்பெரும் விஷயங்கள் வெளியிடப் பெறுவதால் நியாயாபிமானியை ஆதரித்தல் ஒவ்வொரு நியாயாபிமானியின் முக்கிய கடமையாகும். வருடசந்தா ரூ. 4—0—0

# ஜனங்களே! இன்னுமா தூங்குகிறீர்கள்?

## வேதாந்த பாஸ்கரன்

என்னும் நமது மெய்ஞ்ஞான சூரியன் உதயமான பின்னரும் தூங்குவது

ஞாயமா! ஞாயமா!!

அஞ்ஞான நித்திரை நீங்கி! மெய்ஞ்ஞான விழிப்படையுங்கள்!!

இவ்வுலகின்கண் ஆத்மலாபம் அடைய அனேக பக்குவிகள் எண்ணியும் (தூணைக் கட்டிப்பிடித்துக்கொண்டு விடமாட்டேனென்குதே! விடமாட்டேனென்குதே!! என ஓலமிடுபவனைப்போல்) பிரபஞ்சவாழ்க்கையில் அதிகமாக மனதை நுழைத்துக்கொண்டு ஐயோ! பிரபஞ்சம் விடமாட்டேனென்குதே? என்று வருந்துகின்றனர். தூணை நாம் பிடித்துக்கொண்டு விடமாட்டேனென்கிறோமா? தூண் நம்மைப் பிடித்துக்கொண்டு விடமாட்டேன் என்கிறதா? என்றறிந்தவர் சிலரே. ஆதலின் காட்டிலிருப்பினும் நாட்டிலிருப்பினும் கமலநீர்போல் பற்றற்றிருக்க வேண்டுமேயன்றி, மலை, குகை, முதலானவைகளில் வசிக்கவேண்டுமென்கிற நிர்ப்பந்தமில்லை

மரணமாவதோ இன்ன நேரமென்று காணுவது அசாத்தியமாயிருக்கிறது. அறுப்பதற்கு கத்தி தீட்டுகிறபோதும் ஆடு அசைபோடுவதுபோல் காலமெல்லாம் கதை, காவியம், பகடி, பரிகாசவேடிக்கை விளையாட்டுகளில் பொழுதைப் போக்கிவிட்டு சாகப்போகிறகாலத்தில் சங்கரா! சங்கரா!! என்று பிதற்றுவதிற் பயனில்லை என்பதை ஆலோசித்து ஆத்மலாபம் பெற முயலுங்கள்.

தேன்வண்டானது தானும் தேனையுண்ணாமல் தேனை எடுக்க வருபவரையுங் கொட்டுகிற தன்மைபோல் இவ்வுலக வாழ்வையே சதமென நினைந்து, நீங்கள் ஆத்மலாபம்பெற முயலாவிடினும் முயற்சிப்பவர்களை தடுக்காதிருங்கள். ஆத்மானுசந்தானம் பெறுவதற்கு அருமை பெருமைவாய்ந்த நமது வேதாந்த பாஸ்கரன் ஓர் சிறந்த வழிகாட்டியாகும். ஏனெனில் சிலர் எழுதிய காடுமுரடான வசன நடைகளைப்போலின்றி நவீனமான இனிய செந்தமிழ் வசன நடையில் பன்னூற்களிலிருந்தும், மேற்கோள் தீட்டி மிக அழகாயும், சமரசமாயும் எழுதப்பெற்றிருப்பதால் முஹம்மதியர்கள், இந்துக்கள், கிறிஸ்தவர்கள் முதலிய எல்லாமதஸ்தர்களும் வாங்கி வாசிக்கற்பாலதே. இந்நூலை வாசிக்காதவர்கள் வாஸ்தவத்தில் துர்ப்பாக்கியர்களே! தமிழ்க்கல்வி குன்றிய இக்காலத்தில் இத்தகைய நூல் வெளி வந்துலாவுவதானது தமிழ் நாட்டுக்கு எதிர்பாராத ஓர் பெரிய அதிர்ஷ்டமென்றே சொல்லவேண்டும்.

வேதாந்த பாஸ்கரன் விலை ரூ. 1—0—0

யோக ரகசியம் (ஒருபாகம்) விலை அணா 0—6—0

விலாசம்:—மானேஜர், கருணாநிதி வர்த்தகசாலை, ஞானசூரியன் ஆபீஸ்,

விஜயபுரம்—திருவாரூர். S. I. Ry.



PRINTED AND PUBLISHED BY SWAMI KARUNAIYANANANDA

at the KARUNANITHI PRESS, VIJAYAPURAM.